# திராவிடத்தால் வாழ்கிறோம்

1224

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

60

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# வரலாற்றைத் திருத்தி எழுதிய வாக்குறுதி!

**2015**-ஆம் ஆண்டில் ஒரு காட்சி. அந்த ஆண்டு சித்திரை முழுநிலவு நாளில், அ.தி.மு.க. அமைச்சர்கள் பலரும் சென்னை, கடற்கரைச் சாலையில், கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்து வணங்கும் புகைப்படங்கள் வெளியாகின. ஆச்சர்யம் என்னவெனில், அந்தச் சிலைதான், அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் இரவோடு இரவாக அகற்றப்பட்ட சிலை. அந்தச் சிலையால் அவரது ஆட்சிக்குச் சிக்கல் என ஆரூடம் சொன்னபோது, இடித்து அகற்றினார்கள். இப்போதும், ஆரூடத்தின் பொருட்டு வணங்கினார்கள். அந்த வரலாற்றை உருவாக்கியவர் கலைஞர்.

2002-ஆம் ஆண்டு, நீதிமன்றத்தின் படிகளில் ஏறி, கண்ணகி சிலையை அதே இடத்தில் நிறுவப் போராடிய கலைஞர், மக்களின் எழுச்சியோடு நடைபெற்ற அறப்போரின் அடையாளமாக ‘அன்பகம்’ முகப்பில் கண்ணகி சிலையைத் திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய கலைஞர், “ஆட்சி மாறும். கண்ணகி சிலை மீண்டும் அதே இடத்தில் அதே நிலையில் நிறுவப்படும்” என்று அறிவித்தார். 2006-ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியிலும், அதை உறுதி செய்தார். சொன்னதுபோலவே, 2006-ஆம் ஆண்டு அவரது 83-வது பிறந்த நாளின் சிறப்பு நிகழ்ச்சியாக, மறுபடியும் கண்ணகி சிலையை அதே இடத்திலேயே எழுப்பினார்.


2006-ஆம் ஆண்டு வரை, கண்ணகி சிலை வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் இறுதித் தீர்ப்பு அளிக்கவில்லை. மாற்று இடத்தில் நிறுவக்கூடாது என்கிற தடையை மட்டுமே விதித்திருந்தது. இந்த நிலையில், 2006-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆட்சிப்பொறுப்புக்கு வந்ததும், பதவியேற்ற அடுத்த நாளே எழும்பூர் அருங்காட்சியகத்துக்குச் சென்றார். அங்கு, சாக்குப்பையில் கட்டப்பட்டு, சிதிலமடைந்த நிலையில், கேட்பாரின்றி கிடந்தது கண்ணகி சிலை. அதுவும் ‘பிரிட்டிஷ் கொடுங்கோலன்’ நீலன் சிலை அருகில், ஐந்து ஆண்டுகள் தூசி படிந்து கிடந்தது.

### மோதிப் பார்க்கும் விளையாட்டு

“என்னுடைய இனத்தின் பண்பாட்டுச் சின்னத்தையே அழித்து, ஒழித்து அதைக்கொண்டு போய் ஓர் இருட்டறையிலே தள்ளி, தள்ளியதையும்கூட ஒழுங்காகத் தள்ளாமல் குப்புறக் கவிழ்த்து, கொடுமைக்காரன் நீலன் சிலை இருந்த இடத்தில், அருங்காட்சியகத்தில், நீலன் சிலையின் காலடியில் கண்ணகி சிலை கிடந்த காட்சியைப் பார்த்தபோது, எப்படித் துடித்திருப்பேன், எப்படிப் பதைபதைத்திருப்பேன் என்பது என்னுடன் வந்த நண்பர்களுக்குத்தான் தெரியும்” என்று அந்த நிகழ்வினை ‘முரசொலி’யில் எழுதினார்.

வழக்கம்போல சிலர், எதிர்ப்பாட்டு எழுப்பினர். ‘கண்ணகி சிலைதான் முக்கிய பிரச்சினையா’ என விமர்சனம் செய்தனர். ‘தூங்கிக்கொண்டிருக்கின்ற குழந்தையின் கையிலே இருக்கின்ற கரடி பொம்மைக்கும் இந்தக் கண்ணகி சிலைக்கும் என்ன வித்தியாசம்’ எனக் கேள்வி எழுப்பியது ஒரு வார இதழ்.

“இது தமிழர்களின் மான உணர்ச்சியுடன் மோதிப்பார்க்கும் விபரீத விளையாட்டு. தமிழா, நீ இன்னும் தமிழ்நாட்டில் உயிரோடுதான் இருக்கிறாயா என்று கேட்கத்தான் தோன்றுகிறது. இந்தக் கேள்வியை, நான் கேட்கின்ற காரணத்தால் என்னுடைய ஆட்சி செங்கோல் பறிக்கப்பட்டாலும் எனக்குக் கவலையில்லை. தமிழன் மானத்தோடு வாழ்ந்தான், மானத்தோடே சாகட்டும், சாக வேண்டும். மானம் இல்லாமல், மானத்தை இழந்துவிட்டு, ஒரு தமிழன் செத்துவிட்டால், என்ன மிச்சமாகத் தங்கும்? அவன் பிணம் சில நாள் தங்கும், அதற்குப் பிறகு, அவனுடைய எலும்பு சில வாரங்கள் தங்கும், அதற்குப் பிறகு அவன் இருந்த இடம் கொளுத்தப்பட்டால் சாம்பல், புதைக்கப்பட்டால் மண், சில காலம் தங்கும். என்றைக்கும் தங்க வேண்டுமானால், அவனுடைய மானம்தான் தங்க முடியும். அந்த மானத்தைத் தமிழன் இழக்க வேண்டும். அதை இழப்பான் என்கிற தைரியம் ‘அவாள்’ பத்திரிகைகளுக்கு இருக்கின்ற காரணத்தால், கண்ணகி சிலை கரடி பொம்மையாம் - எழுதுகிறது” என்று அதற்கும் பதிலடி அளித்தார்.



ஓவியம் : ரவி பேலட்

### சிலை என விட முடியுமா?

அருங்காட்சியகத்தில் இருந்த சிலையை மீட்டு, மீண்டும் புனரமைத்து 2016 ஜூன் 3 அன்று மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலை நிறுவப்பட்டது. தமிழ்நாடு முழுவதில் இருந்தும் தமிழ் ஆர்வலர்களும் பொதுமக்களும் கலந்துகொண்ட அந்த நிகழ்ச்சியில், உணர்வுபூர்வமாக இருந்தது கலைஞர் உரை.

“சிலை என்று அலட்சியப்படுத்திவிடுவதா? அலட்சியப்படுத்த முடியுமா? சிலைதானே என்று கேவலப்படுத்தி விடுவதா? அதனுடைய பொருள் என்ன? அதிலே அடங்கியிருக்கின்ற அர்த்தம் என்ன? அதிலே அடங்கிக் கிடக்கின்ற பண்பாடு எது? அதிலே பூத்துக்குலுங்குகின்ற கலாசாரம், அதனுடைய பழமை, அதனுடைய பெருமை இவை எல்லாம் என்ன? இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டாமா? அதிகாரத்திலே அமர்ந்துவிட்ட காரணத்தால்; கடந்த ஆட்சிக்காலத்தைப் போல ஆணவக்குரல் அல்ல. அடக்கமான குரல்தான், வேண்டுகோள் குரல்தான், ஏற்கெனவே தமிழன் சீரழிந்து கிடக்கின்றான். இந்த நிலையிலேதான் நாம் இழந்த ஒரு சுதந்திரத்தை, இழந்த ஒரு பெருமையை இன்றைக்கு மீட்டுக் கொண்டு வந்து இந்தக் கடற்கரையிலே, காமராஜர் சாலையிலே நிலைநாட்டியிருக்கிறோம்.

கண்ணகி சிலை, சிலருக்குக் கரடி பொம்மையாகத் தெரியலாம். சிலருக்கு கற்புக்கு அடையாளம் என்று தோன்றலாம். சிலருக்கு அறம் சார்ந்த அரசியலை உணர்த்தும் அடையாளமாகப் புரியலாம். இந்த விளக்கங்களுக்கும் புரிதல்களுக்கும் அப்பால் உள்ள அரசியல் பிரகடனமே முக்கியமானது. தமிழர்கள் பார்ப்பனியத்தை - பாசிசத்தை - அனுமதிக்க மாட்டார்கள் என்கிற சேரன் செங்குட்டுவனின் அறிவிப்பே அது! பார்ப்பனியம் என்பது பாசிசத்தின் மூலவித்து. அது இரத்த வெறி கொண்டது.

இப்போது நடக்கின்ற போர், இரு பரம்பரைக்கிடையே நடக்கின்ற போர். அந்தப் பரம்பரையை அடையாளம் காணுங்கள். எது அந்தப் பரம்பரை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இறுதிப்போர் என்று சொல்லியிருக்கிறார்கள், இறுதிப் போர்தான். ஆனால், நாம்தான் வெல்வோம் என்கின்ற உறுதிப்போர் என்பதை நிலைநாட்டுங்கள்” என்று கேட்டு “கலைச்செல்வி கண்ணகியின் புகழ் வாழ்க! காவிய நாயகி கண்ணகியின் கீர்த்தி வாழ்க! நீதி கேட்ட மங்கை, நெடுஞ்செழியனையே தலைகுனிய வைத்த மங்கை, பூம்புகார்ச் செல்வி கண்ணகியின் புகழ் வாழ்க, வாழ்க!” என்று அவர் நிகழ்த்திய உரை, வரலாற்றைத் திருத்தி எழுதிய தீர்ப்பின் பிரகடனம்.

> “இது தமிழர்களின் மான உணர்ச்சியுடன் மோதிப்பார்க்கும் விபரீத விளையாட்டு. தமிழா, நீ இன்னும் தமிழ்நாட்டில் உயிரோடுதான் இருக்கிறாயா என்று கேட்கத்தான் தோன்றுகிறது.”

...தொடரும்

## தமிழ்நாட்டைக் கவலைக்கிடமாக்கும் ஆட்சி!

த.வெ.க. ஆட்சியமைத்து, ஒரு மாதம் ஆகிவிட்டது. ஆக்கபூர்வ திட்டங்களோ அறிவிப்புகளோ இதுவரை ஒன்றும் வரவில்லை. பெண்கள் பாதுகாப்புக்கு, ‘சிங்கப்படைத் திட்டம்’ என்றார்கள். ஆனால், ‘சிங்கப்படை’ பெண்களுக்கே பாதுகாப்பில்லாத ஆட்சியாக இருக்கிறது. ‘சிங்கப்பெண் சிறப்புப்படை’த் திட்டத்திற்கான நிகழ்ச்சியை ஒத்திவைத்துவிட்டு, தனது மேலாளர் வீட்டு நிகழ்ச்சிக்குச் சென்றார் முதலமைச்சர். ஒரு மாதத்தில் 50-க்கும் மேற்பட்ட கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் பதிவாகி இருக்கின்றன. ஆனால், அரசு நிர்வாகம் செயல்படவே தொடங்கவில்லை.

பதவியேற்ற முதல் நாளே, ‘தமிழ்த்தாய் வாழ்த்தை’ப் பின்னுக்குத்தள்ளி, வழக்கத்தில் இல்லாத ‘வந்தே மாதர’த்தை வலிந்து திணித்தார்கள். அடுத்தடுத்த நிகழ்ச்சிகளிலாவது மாற்றிக்கொள்வார்களா என்று பார்த்தால், டெல்லிக்குச் சென்று பிரதமரிடம் கெஞ்சி, மாநிலத்தின் சுயமரியாதையை அடகுவைத்துவிட்டார்கள். தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய, ஏற்கெனவே கையெழுத்தாகி இருந்த முதலீடுகள் ஒவ்வொன்றாக வெளிமாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. மாநிலங்களவைக்குத் தன் கட்சி சார்பாக ஒருவரை அனுப்ப வாய்ப்பிருந்தும், அதை காங்கிரஸுக்குக் கொடுத்தார்கள். காரணம், மாநிலங்களவைக்குச் சென்றால், பா.ஜ.க. அரசை எதிர்த்துப் பேச வேண்டும், மசோதாக்களை எதிர்க்க வேண்டும். அதற்குத் துணிச்சல் இல்லாமல் அந்த வாய்ப்பை, காங்கிரஸ் பக்கம் தள்ளிவிட்டார்கள்.

சினிமா பிரபலங்கள், தொழிலதிபர்கள் சர்வ சாதாரணமாக தலைமைச் செயலகத்திற்குள் நுழைந்துவிடுகிறார்கள். ஆனால், சாமானிய மக்களால் உள்ளே நுழைய முடியவில்லை. கட்சிக்கு நான்கைந்து பவர் செண்டர்களை வைத்துக்கொண்டு, முதலமைச்சர் எதற்கும் வாயையே திறப்பதில்லை. ஆனால், ‘வாயில் நன்றாக வரும்’ என்று முதலமைச்சருக்கான பண்பே இல்லாமல் ஸ்கிரிப்டை படித்துவிட்டுச் செல்கிறார். சட்டமன்றத்தில் இருந்து சாவகாசமாக வீட்டுக்குச் சென்றுவிட்டு, ‘எக்ஸ்’ தளத்தில் பதில் கொடுக்கிறார். ‘மாற்றம் வேண்டும்’ என்றவர்கள், ‘இதுதானா அந்த மாற்றம்’ என தலையில் அடித்துக்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். ஒட்டு மொத்தத்தில், த.வெ.க. ஆட்சியின் ஒரு மாத ரிப்போர்ட் தமிழ்நாட்டைக் கவலைக்கிடம் ஆக்கியிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### நன்றியுணர்வுடன் ஒரு சந்திப்பு!



தரும.சரவணன்

என் தந்தை பொன்.தருமராசன் அவர்கள் கழகப்பற்றாளர். பல போராட்டங்களில் சிறை சென்றவர். தலைவர் கலைஞரின் பெருமுயற்சியால் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரையால், நான் பொதுத்துறை நிறுவனத்தில் பணியில் சேர்ந்தவன். அந்த நன்றி உணர்வுடன், “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, வாழ்நாளில் ஒருமுறையாவது சந்தித்துவிட வேண்டும் என்பது என் கனவு” என்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்களிடம் விருப்பம் தெரிவித்திருந்தேன். 2009-ஆம் ஆண்டு தை முதல் நாளில் என்னை கோபாலபுரத்துக்கு அழைத்துச் சென்று கலைஞர் அவர்களிடம், “தம்பி தரும.சரவணன், தஞ்சாவூர். வெற்றித் தமிழர் பேரவை” என்று என்னை அறிமுகம் செய்து வைத்தார் கவிப்பேரரசு. “என்ன பேரு, எந்த ஊரு” என்று கலைஞர் என்னிடம் விசாரித்தார்கள். அது என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி. அன்று, தலைவர் அளித்த 10 ரூபாய் நோட்டை வாழ்நாள் மாணிக்கமாகப் பாதுகாத்து வருகிறேன்.

– தரும.சரவணன்,
வெற்றித் தமிழர் பேரவை, மாநகரச் செயலாளர், தஞ்சாவூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பொதுப் பணிகளுக்கு மட்டுமே...

1969-ஆம் ஆண்டு, கலைஞரின் 46-வது பிறந்தநாள் விழா, சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர்கள் சார்பில், கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், கல்வியாளர்கள் கலந்துகொண்டு கலைஞரை வாழ்த்தினார்கள். ஆனால், அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள கலைஞர் மறுத்துவிட்டார். பொதுப்பணிக்கு அல்லது கட்சிக்கு நிதியளிக்கும் விழாவாக ஏற்பாடு செய்யப்படும், பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்துகொள்வது என்பதில் உறுதியாக இருந்து, நீண்ட விளக்கக் கடிதம் எழுதினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900